ENC-1-TA

# இன்றைக்கு கிறிஸ்தவர்களுக்கு தேவன் அளிக்கும் ஊக்கம் - நிகழ்ச்சி 1

நீங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளில் தேவன் உங்களை ஊக்குவிக்கும் அனுபவத்தை பெற விரும்புகிறீர்களா? பெரும்பாலானவர்கள் ஒவ்வொருநாளும் உலகத்தையே தங்கள் தோள்களில் சுமந்து நடப்பது போன்ற உணர்வுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை சோர்வடையவும் குழப்பமடையவும் செய்யும் பிரச்சனைகள் சூழ்ந்திருப்பதை உணர்கிறார்கள். அவர்கள் அதிகமாக கவலை படுகிறார்கள். வாழ்க்கையே கைமீறி போனது போல தோன்றுகிறது. இதன் விளைவாக, அவர்கள் தங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்துவதற்கு கடினப்படுவதோடு சந்தோஷமாக இருப்பது அரிதானதாக காண்கிறார்கள். அப்படிப்பட்ட உணர்வுதான் உங்களுக்கும் இருக்கிறதா? மற்றவர்களுக்கு பல சந்தேகங்கள் இருக்கலாம். உங்கள் கடந்த கால பாவங்களை தேவன் மன்னித்துவிட்டார் என்று உங்களுக்கு எப்படி நிச்சயமாக தெரியும்? அல்லது, நீங்களே கேட்டிடலாம், “ஜெயமுள்ள வாழ்க்கை வாழ்வதும் கிறிஸ்துவின் சந்தோஷத்தை அனுபவித்து ஒவ்வொரு நொடியும் சமாதானத்தோடு இருப்பது எப்படி?

ஜான் அன்கெர்பேர்கின் இந்த நிகழ்ச்சியில் நாங்கள் பதிலளிக்க இருக்கும் கேள்வி: “உங்கள் பாவங்களை தேவன் மன்னித்துவிட்டார் என்று எப்படி நிச்சயமாக சொல்லமுடியும்? எங்களோடு இணைந்துகொல்லும்படி உங்களை வரவேற்கிறோம்.

******

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வரவேற்கிறோம். கிறிஸ்தவர்களாக இருக்கிறவர்களுக்காக பேச விரும்புகிறேன் நீங்கள் கிறிஸ்தவராயிருந்தும் மன அழுத்தத்தில், வெட்கத்தில், தேவனால் மன்னிக்கபடாத உணர்வோடிருக்கலாம். அது சரிதான். நீங்கள் கிறிஸ்தவராக இருந்தும் இப்படி பாட்ட உணர்வுகளோடு இருக்க வாய்ப்பிருக்கிறது. நீங்கள் இந்த உணர்வோடு இருக்கவேண்டும் என்பது தேவனுடைய விருப்பமல்ல, ஆனால் நீங்கதா அப்படி யோசிக்கிறீர்கள்.

அநேக கிறிஸ்தவ ஜனங்கள் இரகசியமாக என்னிடம் சொல்வதுண்டு, “ஜான், என்னுடைய பாவங்களை தேவன் மன்னித்திருக்கிறாரா என்று எனக்கு தெரியவில்லை. அதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன், ஆனால் ஒரு சில காரணங்களால் தேவனுடைய அன்பையும் அங்கீகரிப்பையும் என்னால் அனுபவிக்க முடியவில்லை என்று கூறுகிறார்கள்.”

மற்ற கிறிஸ்தவர்கள் தேவனை அறிந்துகொண்டதையும் கிறிஸ்துவின் மன்னிப்பை அருமையாக பெற்றுகொண்டதை பற்றியும் சாட்சி கொடுப்பதை கேட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு எதனால் அந்த அனுபவம் உண்டாகவில்லை என்று யோசிக்கிறார்கள்.

இதே வரிசையில் இன்னும் சில கிறிஸ்தவர்கள் தொடர்ந்து வெட்கத்தை உணருகிறார்கள், குறிப்பாக தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்பதை நினைக்கும்போது அப்படி யோசிக்கிறார்கள். அவங்க என்னிடம் சொல்லியிருக்கிறார்கள், “என்னுடைய வாழ்வில் தேவனுக்கு பிரியமாக என்னால் இருக்க முடியவில்லை என்கின்றனர். அவர் என்னால் மனசோர்வடைவதால் ஒரு மாதிரி முறைத்து பார்த்து பரலோகத்தில் அவரை விட்டு தள்ளி ஒரு மூலையில் நிறுத்திடுவார் என்கின்றனர்.

மற்ற சில கிறிஸ்தவ நண்பர்கள் எதனால் ஆவிக்குரிய ஒடுக்குதலை அனுபவிக்கிறோம் என அறியாமல் இருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் சந்தோஷமே இல்லாமல் இருக்கிறார்கள் அவர்கள் கிறிஸ்தவ

வாழ்வை அவர்கள் ஆனந்தமாக அனுபவிப்பதில்லை. உங்களுக்கு இது ஏதாவது பொருத்தமாக இருக்கிறதா? அப்படியானால், உங்களை உற்சாகப்படுத்தி உங்களுக்கு உதவியாக இருக்கும் தேவ வார்த்தையின் சில நற் செய்திகளுக்கு உங்கள் கவனத்தை செலுத்த முயலும்படி கேட்கிறேன்.

சரி,பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தாங்கள் மன்னிக்கப்படவில்லை என்று எண்ணி சோகமாக இருப்பதற்கு முக்கிய காரணம் போது கூட்டங்களில் தங்கள் கைகளை உயர்த்தி அர்ப்பணித்து தீர்மான அட்டைகளை எழுதிகொடுக்கும் கிறிஸ்தவர்கள் மட்டும் தான் சந்தோஷமாக இருக்கும் பூரண கிறிஸ்தவர்கள் என்று தவறாக நினைப்பதுதான் அதற்கு காரணமென்று நினைக்கிறேன். அதை அவர்களும் செய்திருந்த போதிலும், அவர்கள் ஏன் சந்தோஷமாக இல்லை என்று நினைக்கிறார்கள். உண்மையில், எல்லாவிதமான கடினமான சூழ்நிலைகளையும் அவர் சந்திக்க நேர்வதால் அவர்கள் கேள்வி, “நா தேவனுடைய பிள்ளையாக இருந்தால் எப்படி இந்த மாதிரியான காரியங்கள் எனக்கு நடக்க முடியும்?

அப்படிப்பட்ட உணர்வுகளும் அனுபவங்களும் எல்லா கிறிஸ்தவர்களுக்கும் உண்டாயிருக்கும். வேதாகமம், சபை வரலாறு, மற்றும் அனுபவங்கள் தெளிவாக கூறுகிறது உண்மையான கிறிஸ்தவர்கள் பிரச்சனைகளை அனுபவிப்பார்கள். அவர்களுக்கு சந்தேகம் உண்டாகும், அவர்களும் ஒடுக்கப்பட்டு வெட்கமாக உணர்ந்திடுவார்கள். உதாரணமாக: மோசே, தாவீது, பேதுரு வேதாகமத்தில் எனக்கு சட்டென்று நினைவிற்கு வருகிற மூன்று பேர் இவர்கள்தான்.

அதுமட்டுமல்ல, நாம செய்யவேண்டிய ஒரே விஷயம் இரட்சிப்பை விசுவசித்து ஏற்றுகொள்ள வேண்டும் அதன் விளைவாக தானாகவே சந்தோஷமான ஒரு ஜீவியத்தை பெற்றிடுவோம், புதிய ஏற்பாட்டு நிருபங்கள் எழுதப்பட அவசியமில்லாமல் இருந்திருக்கும். ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு எந்த பிரட்சனையும் இல்லாமல் வாழ் நாள் முழுவதும் சந்தோஷமாக இருந்திருக்கலாம். ஆனால் வேதாகமத்தில் பல உதாரணங்கள் சொல்லப்பட்டிருக்கிறது, பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு இரண்டிலும், இது ஒரு பிரட்சனை அல்ல என்றிருக்கிறது.

ஏதோவொரு விதத்தில் பிரச்சனையில் இருக்கும் மக்களுக்காகதான் புதிய ஏற்பாட்டின் பல பகுதிகள் எழுதப்பட்டுள்ளது, பல காரணங்களால் சோர்ந்து பொய் இருந்தவர்கள், அவர்கள் இரட்சிக்கப்பட்ட வாழ்க்கையிலிருந்து பின்மாற்றத்தை அடையும்படியான ரீதியில் பல சோதனைகளை சந்தித்தார்கள். அவர்கள் சந்தோசம் இல்லாமல் கிறிஸ்தவர்களாக இருந்தும் அதிக வேதனைகளை அனுபவித்தார்கள். உங்களுக்கு இது பொருந்துகிறதா? எதை நம்புவது என்ன செய்வதென்று அவர்களுக்கு தெரியவில்லை, அவர்களுக்கு உதவி தேவையாக இருந்தது. நம்மை போன்றவர்களாக இருந்த அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு எழுதினார்கள் இன்றைக்கு நாம் சந்திக்கும் பிரச்சனைகளை போன்ற பிரச்சனைகளுக்கு தேவையான தெய்வீக பதில்களை கொடுத்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு என்ன கூறினார்கள்? அவர்கள் திரும்ப திரும்ப பதிலளிக்கு பிரதானமாக கேள்வி எதை பற்றியது என்றால் அது தேவன் அருளும் மன்னிப்பாகும்.

அதுமட்டுமல்ல, இவர்கள் பல சூழ்நிலைகளில் அதிகப்படியான பாவங்களை செய்திருந்ததால் தேவன் அவர்களை இன்னமும் நேசிக்கிறாரா என்று சந்தேகித்தனர், அவர் மன்னிப்பாரா, பரலோகத்தில் சேர்த்துகொள்வாரா என்று நினைத்தனர். அப்போஸ்தலர் எழுதிய நிருபங்களை பெற்றுகொண்ட ஜனங்கள் சொன்னது இதுதான், “தேவன் என்னை நேசிக்க மாட்டார் . ஏனென்றால், நா திருடியிருக்கிறேன்; கருகலைப்பு செய்திருக்கிறேன்; நா அதிக பொய்களை கூறியிருக்கிறேன்; தவறான பாலுறவு கொண்டிருந்தேன்; நா விபசாரத்தில் ஈடுபட்டேன் ஓரினசேர்க்கையில் ஈடுபட்டேன்.” இப்படிப்பட்ட நபர்களை போல, உங்கள் வாழ்விலும் ஏதோவொரு பாவம் தேவன் உங்களை நேசிக்க முடியாதபடிக்கும் உங்களை மன்னிக்க கூடாதபடி தடையாக இருக்கிறதென்று நீங்கள் நினைக்கலாம்.

சரி, வேதம் சொல்கிறது தேவனை பற்றி தவறாக புரிந்துகொண்டிருக்கீறீர்கள் என்று. அவருக்கு உங்கள் பாவங்களை பற்றி எல்லாம் தெரியும் இருந்தாலும் உங்களை நேசிக்கிறார். முழுமையான மன்னிப்பை பெறும்படிக்கும் அவருடைய வழிநடத்துதலை பெறும்படிக்கும் அவரிடம் வரும்படியாக விரும்புகிறார். இது உண்மை என்பதை பழைய புதிய ஏற்பாடுகளில் இருந்து உங்களுக்கு எடுத்து சொல்ல முயற்சிக்க விரும்புகிறேன். தேவன் நம்முடைய பாவங்களை மன்னிக்க ஆயத்தமாக இருப்பதாக எதன் அடிப்படையில் சொல்லுகிறார் என்பதையும் காண்பிக்க விரும்புகிறேன்.

தனது புத்தகமான, “தி கிரேஸ் அவேக்கனிங்”கில் சக் சுவிண்டால் தேவனுடைய இரக்கத்தை வெளிப்படுத்தும் தமது பிரியமான பழைய ஏற்ப்பட்டு சம்பவம் ஒன்றை உதாரணமாக எடுத்து கூறியிருக்கிறார். அது மேவிபோசேத் என்ற நபரை பற்றியது. சவுல் ராஜாவை உங்களுக்கு நினைவிருக்கிறதா? சரி, அவனுக்கு யோனத்தான் என்ற பெயரில் ஒரு மகன் இருந்தான், அவனுக்கு மேவிபோசேத் என்ற பெயருள்ள மகன் இருந்தான். யோனத்தானின் மகன் பிறவி முடவனாக இருந்தான், அவனை பராமரித்து வந்த செவிலியர் ஒருவர் சில சேவகர்களிடமிருந்து தப்பித்து ஓடிகொண்டிருக்கையில், அவள் விழுந்து குழந்தையை கீழே விட்டுவிட்டாள். அவளுக்கு அந்த சமயத்தில் மருத்துவ உதவிகள் கிடைக்காமல் போனதால், அந்த சிறுவனுக்கு நிரந்தர காயம் உண்டானது. அவன்  தன் வாழ்நாள் முழுவதும் இரண்டு கால்களும் இல்லாதவனாக வாழ்ந்துவந்தான். அடுத்த 15 முதல் 20 ஆண்டுகளுக்கு வேதத்தில் அந்த சிறுவனை பற்றியும் ஒன்றுமே சொல்லப்படவில்லை. ஆனால் திடீரென்று ஒருநாள், தாவீது ராஜாவினுடைய ஆளுகையில், அவனுடைய பெயர் வெளியில் வருகிறது.

இந்த சம்பவத்தை நீங்கள் உங்கள் மனதில் வைத்துகொள்ளுங்கள். முந்நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கிழக்கத்திய பகுதியில், புதிய ராஜா அரியணை ஏறியவுடன், முந்தின ராஜாவின் குடும்ப நபர்கள் அனைவரும் அங்கிருந்து அகற்றப்படுவார்கள். ஒரு புதிய ராஜா அரியணை ஏறியவுடன் முந்தின அரசனின் உறவினர்கள் அனைவரும் என்ன நடக்குமோ என்ற பயத்தோடு இருக்க பல காரணங்கள் உள்ளது. அதோடு, சவுல் ராஜா, சவுல் ராஜாதான் முதலில் இருந்தவர் என்று நினைவிருக்கிறதா, பல சந்தர்ப்பங்களில் தாவீதை கொலை செய்ய முயன்றான். எனவே மேவிபோசேத்தும் ஒவ்வொரு நாளும் தன்னுடைய ஊனமான நிலையோடு வாழ்ந்தவன், இப்போது ஜீவனை பற்றிய பயத்தோடு இருக்கிறான்.

ஆனால் வேதம் சொல்கிறது ஒருநாள் தாவீது ராஜா சவுலின் குமாரனாகிய யோனத்தானோடு தனக்கு இருந்த தெய்வீக நட்பை குறித்து சிந்தித்துகொண்டிருந்தானாம். அதன் விளைவாக, 2 சாமுவேல் 9:1, தாவீது கேட்கிறார், “யோனத்தான் நிமித்தம் என்னால் தயவுபெறத்தக்கவன் எவனாவது சவுலின் வீட்டாரில் இன்னும் மீதியாயிருக்கிறவன் உண்டா என்று தாவீது கேட்டான்.”

இப்ப தாவீது கேட்கும்போது, “என்னால் தயவுபெறத்தக்கவன் எவனாவது இருக்கிறானா என்கிறான்.” தயவு என்பதற்கான எபிரேய வார்த்தை ச்சேஸ்ட். பெரும்பாலான நிலைகளில் இது, “கிருபை, இரக்கம் நீடிய தயவு என பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதிகளில் வருகிறது. தாவீது கேட்டதற்கு அர்த்தம் “சவுலின் குடும்பத்தில் பாத்திரவான் யாராவது இருக்கிறார்களா என்று கேட்கிறானா? இல்லை. அவன் கேட்பது இதுதான், “யோனத்தானின் நிமித்தன் என்னால் தயவு பெறத்தக்கவன் எவனாவது அவனுடைய குடும்பத்தில் இருக்கிறார்களா?” அவனுடன் இருந்தவர்களில் ஒருவன் அவனிடம் கூறுகிறான் அவன் குடும்பத்தில் ஒருவன் பிழைத்திருக்கிறான் என்றான். ஆனால் அதோடு நிறுத்தாமல், தாவீதிடம் அவன், “அவனை உங்களோடு வைத்துகொள்வதில் எந்த பிரயோஜனமும் இல்லை. ஏனென்றால், அவன் முடவன் என்றான்.” ஆனா அதற்கு தாவீதின் பிரதியுத்திரம் நன்றாக இருந்தது. அவனிடம் என்ன கேட்டான், “அவன் எவ்வளவு முடமாக இருந்தான் என்பதா? இல்லை. தாவீது சொல்கிறான், “போய் அவனை அழைத்துவா. என்னிடத்திற்கு அழைத்துவாருங்கள். அவன் எங்கே இருக்கிறான் என்றான்.” 2 சாமுவேல் 9:2-4

தாவீதின் மனிதன் இவன் லோதேபாரிலே இருக்கிறான் என்று கூறினான். மேவிபோசேத் வாழ்ந்துகொண்டிருந்த அந்த இடம் ஒன்றும் விளையாத நிலமாக கருதப்பட்டு வந்தது. அங்கு எந்த விளைச்சலும் இல்லை; அது வனாந்தரமான இடம், வீணான நிலம். இன்றைய காலப்படி, மேவிபோசேத் ஒரு படுகுழியில் வாழ்ந்து வந்தான் என்று சொல்லலாம். அவன் முந்தினவனாக இருந்திருந்தாலும் இப்போது கீழான இடத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறான். ஆனாலும் தாவீது இந்த முடவனுக்காக ஆல் அனுப்பினான்.

எருசலேமில் உள்ள ராஜாவின் அரண்மனைக்கு வரும் மேவிபோசேத்தின் மனதில் என்ன ஓடிகொண்டிருக்கும் என்று நீங்கள் சிந்தித்து பார்க்க விரும்புகிறேன். அவன் இதுவரைக்கும் யாருக்கும் தெரியாத ஒருவனாக இருந்துவந்தான். அவன் தன் தாத்தாவை வென்ற ராஜா முதல் ஒருவராலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட முடியாதவனாக இருக்கவே விரும்பினான். இப்போது மரணத்திற்கு நேராக நடத்தி செல்லப்படுவது போல உணருகிறான். இருந்தாலும், புதியா ராஜா அவனை வெறுப்பதற்கு பல காரணங்கள் இருந்தபோதிலும் அவனை நேசிப்பதற்கு ஒரு காரணமும் தென்படவில்லை. ஆனால் மேவிபோசேத்தை இரத்தத்தில் இருந்து இறக்கி அவன்  நினைத்து பார்ப்பதற்கு முன்பே, அவனை கொண்டுவந்த ராஜாவுக்கு முன்பாக நிறுத்தினார்கள்.

வேதம் சொல்கிறதுபயமும் நடுக்கமும் கலந்தவனாய் அவன் ராஜாவுக்கு முன்பாக சாஸ்டாங்கமாய் விழுந்தான். தாவீது தன்னை பற்றி என்ன நினைக்கிறார் என்று அவனுக்கு தெரியாது. யோசித்து பாருங்கள் ராஜா அவனிடம் பேசும்போது அவனுடைய உணர்வு எப்படி இருந்திருக்கும் ராஜா சொல்கிறார், " நீ பயப்படாதே, உன் தகப்பனாகிய யோனத்தான் நிமித்தம் நான் நிச்சயமாய் உனக்கு தயை செய்வேன் என்றார்." (2 சாமுவேல் 9:6-7)

இங்க ச்சேஸ்ட் என்ற வார்த்தை வருகிறது, இதற்கு தயவு என்ற அர்த்தம், பாத்திரமற்றவனுக்கான தயவு, கிருபை. தாவீது இந்த முடவனான மனிதனை தண்டிக்கும்படியாக அழைத்துவர வில்லை. அவனுக்காக அவன் நினைத்தது நன்மையாவைகள், தீமையானவை அல்ல. அவனை உயர்த்தும்படியாக தான் அவன் விரும்பினான், அவனை தகர்த்திட விரும்பவில்லை. எதற்காக தாவீதை அவனை அப்படி நடத்த விரும்பினான்? தாவீது மேவிபோசேத்துக்கு தயவு செய்ய விரும்பினான், அவன் செய்த நற்க்கிரியைகளுக்காக அப்படி நினைக்கவில்லை, அவன் தகப்பனாகிய யோனத்தான் நிமித்தம் அப்படி செய்தான்.

தாவீது மேவிபோசேதுக்கு காண்பித்த இந்த தகுதியற்ற நிலைக்கு அளிக்கப்படும் தயவானது தேவன் இன்றைக்கு நம் ஒவ்வொருவருக்கு அளித்திடும் தயவிற்கு ஒப்பாக இருக்கிறது. நம்முடைய கிரியைகளின் பலனாக தேவன் நமக்கு தயவாக இருப்பதில்லை, ஆனால் நமது சார்பில் அவருடைய குமாரனுடைய ஜீவனை மரணத்தில் ஊற்றியதால் வந்தது. அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! அவர் இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே அழியாததும் மாசற்றதும் வாடாததுமான சுதந்திரத்திற்கு ஏதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின் படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்." 1 பேதுரு 1:3- 4

ஆனால் தாவீதின் இரக்கத்திற்கு மேவிபோசேத் அளித்த பிரதியுத்திரம் என்னவென்று கவனித்து பாருங்கள். அது ஒருவேளை நீங்கள் தேவனுடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் அளித்த பிரதியுத்தரத்தை போலிருக்கலாம். அவன் தாவீதிடம் கூறுகிறான், "செத்தவனை போலிருக்கும் என்னை நீர் நோக்கி பார்க்கிறதற்கு உமது அடியான் எம்மாத்திரம் என்றான்." (2 சாமுவேல் 9:8). அவன் தன்னை செத்த நாயிக்கு ஒப்பிடுகிறான், தாவீதினிடத்தில் தான் தன்னை எப்படிப்பட்டவனாக காண்கிறான் என்று கவனியுங்கள் அவன் ஒன்றுக்கும் உதவாதவனாக, அபாத்திரவானாக, பிரயோஜனமற்றவனாக காண்கிறான். ஏன்? ஏன்னா அவன் அபாத்திரமானவன் என்று அறிவான், ராஜாவிற்கு எந்த லாபமும் ஏற்ப்படுத்த முடியாதவன் என்பதை அறிவான். அவன் இரண்டு கால்களும் முடவானவன் என்று தெரியும்; பண ரீதியாக உடல் ரீதியாக எந்த விதத்திலும் தாவீதுக்கு பிரயோஜனமாக இருக்கு முடியாதென அறிந்திருக்கிறான். எந்தவிதத்திலும் அவன் பிரயோசனமானவன் அல்ல.

இதெல்லாமே உண்மைதான், ஆனால் முக்கியமான காரியத்தை அவன் விட்டுவிட்டான். அவன் யோனத்தானின் மகனாக இருந்தபடியால் அவனை இரக்கத்தினாலும் தயவினாலும் தழுவிக்கொள்ள தாவீது நினைத்தான். உண்மையில், தாவீது தனது குமாரர்களுக்கு அளித்த அதே சிலாக்கியத்தையும் அந்தஸ்தையும் இந்த முடவனுக்கும் கொடுத்தான். வேதம் சொல்கிறது, "மேவிபோசேத் ராஜாவின் பந்தியில் நித்தம் அசனம்பண்ணுகிரவனாயிருந்தபடியினால், எருசலேமிலே குடியிருந்தான்; அவனுக்கு இரண்டு காலும் முடமாயிருந்தது." (2 சாமுவேல் 9:13)

அது எப்படி பட்ட காட்சியாக இருந்திருக்கும்?என்னவொரு கிருபை. மேவிபோசேத் தகுதியற்றவனாக இருந்தான், இருந்தாலும் தாவீதினால் நிபந்தனையற்ற விதமாக அன்புகூரப்பட்டான். இது தயவை பெறுவதற்கு சிறந்த உதாரணம், தேவன் தம்முடைய குமாரனுடைய சிலுவை மரணத்தினிமித்தம் உங்கள் மீதும் என் மீதும்  தமது நிபந்தனையற்ற அன்பையும் கிருபையையும் பொழிந்தருளினார். மேவிபோசேத் முடவனாக ஒன்றும் இல்லாதவனாக ராஜாவினிடத்தில் எதையும் பெற தகுதியற்றவனாக இருந்தான். அவனுடைய தயவை பெற அவன் முயற்சிக்கவே கிடையாது. அவன் தனக்கு அளிக்கப்பட ராஜாவின் தயவையும் இரக்கத்தையும் தாழ்மையோடு ஏற்றுகொள்வதை தவிர வேறொன்றும் செய்யவில்லை.

வேதம் சொல்லுகிறது நாமும், கூட, நம்பிக்கையற்ற பாவிகளாயிருந்தோம், முற்றிலும் தகுதியற்றவர்களாய் தேவனுடைய தயவையும் மன்னிப்பையும் பெற பாத்திரமற்றவர்களாக இருந்தார்கள். ஆனால் அவர் தமது

இரக்கத்தை நமக்கு தந்தருளினார் அவர் நம்மை நேசிக்கிறார் என்று விசுவாசித்து தாழ்மையோடும் உற்சாகத்தோடும் அதை பெற்றுகொள்ளும்படி வழிநடத்தப்படுகிறோம்.

ஒருவேளை நீங்க சொல்லலாம், “ஜான், இது பழைய ஏற்பாட்டின் சிறந்த கதைதான், ஆனால் இந்த நாட்களில் தேவன் இவ்வாறு செயல்படுகிறார் என்று எனக்கு தோன்றவில்லை. அதாவது, எதற்காக நம் தேவன், அண்டசராசரத்தின் ராஜா, கிருபையை நீட்டித்து, எனக்கு தயவாயும் இறக்கமாயும் இருக்கணும்? என்னுடைய பாவங்களை பற்றி அவர் அறிந்திருப்பதால் நிச்சயம் என்னில் பிரியமாக இருக்க மாட்டார்.”

சரி, உங்கள் பாவங்களை பற்றி பேசிடலாம். உங்களுக்கு நிச்சயம் சமாதானம் இருக்காது. கிறிஸ்தவ விசுவாசத்தின் சில அடிப்படை சத்தியங்களை கற்றுக்கொண்டு அதை நம்பாவிட்டால் நீங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தில் சந்தோஷத்தை அனுபவிக்க முடியாது. அந்த உண்மைகளை தெரியப்படுத்தும் விதமாக, உங்களை ஒரு கேள்வி கேட்க்கிறேன். உங்கள் பாவங்களாய் குறித்து நீங்கள் நினைக்கும்போது பிதாவாகிய தேவனை எப்படி பார்க்கிறீர்க? ஒவ்வொரு முறையும் உங்கள் பழைய பாவங்களோடு அவர் முன்பாக வரும்போது அவருடைய பிரதியுத்திரம் எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? ஏன்னா நம்மில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள்  தேவன் நம்மீது கோபமாக இருக்கிறார் என நினைத்து, நாம் தவறு செய்யும்போது அவர் நம்மை  தண்டிப்பார் என்று, அதை குறித்து வெட்கப்பட்டு அவரைவிட்டு பின்வாக்குகிறோம். ஆனால் ஒரு கிறிஸ்தவராக நீங்கள் இப்படி நினைத்தால், உங்கள் எண்ணம் தவறானது.

கேட்ட குமாரனை பற்றிய சம்பவத்தில் இயேசு, (லூக்கா 15:11-32) பிதாவாகிய தேவனுக்கு விரோதமாக நாம் பாவம் செய்யும்போது அவருடைய மனப்பான்மை எப்படி இருக்கும் என்று அதில் போதிக்கிறார்.

******

இந்த சம்பவம் குறிப்பாக வெட்கத்தோடு இருக்கும் கிறிஸ்தவர்களுக்கென்று சொல்லப்பட்டிருக்கிறது, தேவனுக்கு முன்பாக எப்படி நிற்ப்பதென்று நினைப்பவர்கள், நீங்க பெரிய பாவத்தை செய்து தேவனுக்கு பிரியமில்லாமல் நடந்திருப்பது தெரிகிறது. சரி, இந்த சம்பவத்தில் இயேசு பிதாவிற்கும் மகனிற்கும் இடையில் இருக்கும் உறவை பற்றி விவரிக்கிறார். அந்த மகன் சுயனலவாது, முரண்டுபிடிப்பவன், தகப்பனுடைய சொத்திலிருந்து தனது பங்கை தரும்படி தைரியமாக கேட்கிறான். இயேசுவின் நாட்களில் இருந்த கலாசாரத்தில், தகப்பன் மரிப்பதற்கு முன்பு தாயின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு முன்பு சொத்தில் பங்கு கேட்பது அதுவரை கேட்டிராத ஒரு சம்பவமாக உ. இந்த மகனுக்கு அது பெரிதாக இல்ல. இந்த மகன் தனது பங்கை எடுத்துகொண்டு குடும்பத்தை பற்றி எதையும் யோசிக்காமல் குறுகிற காலத்திற்குள் அந்த சொத்தையெல்லாம் பாவ சந்தோஷத்தில் செலவழித்தான்.

இயேசுவின் நாட்களில் வாழ்ந்த பரிசேயர்கள் இந்த மகனை குடும்பத்தை விட்டு விளக்கி வைக்க தகப்பனுக்கு எல்லாவித உரிமையும் இருக்கிறது என்று கூறினார்கள். ஆனால் இயேசு இன்னொரு அடி முன்பாக செல்கிறார். கொடுமையான ரீதியில் இந்த மகன் அனுபவித்த காரியங்களை எடுத்து சொல்கிறார். இறுதியாக இளைய குமாரன் பன்றி மேய்க்கும் நிலையை அடைந்தான் என்று கூறினார் – தவிட்டை தின்னும் நிலைக்கு வந்தான். மத தலைவர்களுக்கு, இதை விட கேவலமான நிலை வேறொன்றும் இருக்காது என்ற எண்ணம் உண்டு.

எதற்காக இயேசு இந்த இளைய குமாரனை இப்படியாக வர்ணித்து கூறுகிறார்?ஏனென்றால் தனது தகப்பன் இருதயத்தை அசக்கும்படி ஊக்குவிக்கும்படி அவனை மன்னித்து ஏற்றுகொள்வதற்கு இந்த மகனிடம் எந்த தகுதியும் இல்லை என்பதை விளக்கி சொல்ல முயலுகிறார். இந்த மகன் முழுவதும் ஒடுங்கிபோயிருக்கிறான். எல்லா நம்பிக்கையும் ஒன்றுமில்லாமல் போன பிறகு, பரிசேயர்களுக்கு அதிர்ச்சியூட்டும் விதமாக இயேசு இந்த சம்பவத்தை சொல்லி முடிப்பதை பார்க்கிறோம். அவர் சொல்கிறார், தன்னுடைய சொந்த தவறுகளால் பன்றிகளின் கூட்டத்தின் நடுவில் உட்கார்ந்துகொண்டு மரண பசியோடு இருக்கும் நேரத்தில், தனது தகப்பனை குறித்து எண்ணிப்பார்த்து மறுபடியும் வீட்டிற்கு வரும்படியாக தீர்மானிக்கிறான் என்கிறார். அந்த கேட்ட குமாரன் தன்னை சுத்தப்படுத்திகொள்ள முயலவில்லை. தன்னை அழகாக காட்டிக்கொள்ள எந்த முயற்சியும் அவன் செய்யவே இல்லை. அப்பாவினிடத்தில்

அழுக்கானவனாக வருகிறான், வெட்கத்தோடு, கூச்சத்தோடு, அங்கு வருவதற்கு தனக்கு தகுதியில்லை என்று அறிந்தவனாய், அவன் உயிர்வாழ்வதற்கு தன்னை வேலைக்காரரில் ஒருவனாக வைத்துகொள்ளும்படியாக கேட்க வருகிறான்.

பரிசேயர்கள், இந்த கட்டத்தில், இந்த மகனுக்கு தகப்பன் எந்த வித மாறுதலும் சொல்லாமல் அவன் அசட்டை பண்ணுவான் என்று நினைத்தார்கள், முரட்டாட்டமுள்ள மகன். தன்னுடைய சுய இஷ்டத்தின் படி வாழ்ந்து செலவழித்தவன். இப்போது குடும்பத்தை விட்டு விரட்டி அடிக்கப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்படவேண்டியவன். ஆனால் இங்கயும் இயேசு அவர்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கிறார் பரலோக பிதாவின் அன்பிற்கு எல்லை இல்லை என்பதை போதிக்கிறார். இந்த மகனுடைய உறவை முழுவதும் துண்டிக்க பிதாவின் பொறுமைக்கு இவ்வளவு எல்லை இருக்கிறது என்று சொல்வதாக இருந்தால், நிச்சயம் இயேசு கூறிய இந்த சம்பவத்தில் இளைய குமாரன் எல்லையை மீறியிருப்பான். எலாவற்றையும் தவறாகவே செய்திருக்கிறான்.

இயேசு தெளிவாக எடுத்து சொல்கிறார். தேவனுடைய அன்பும் மன்னிப்பும் கிடைக்க பெற முடியாத அளவிற்கு எந்த ஆணும் பெண்ணும் போக முடியாது. ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் நீங்க என்ன செய்திருந்தாலும் சரி, தேவனை அவருடைய எல்லைக்கு புறம்பாக நீங்கள் தள்ள முடியாது. அவர் உங்கள் மீது கொண்டுள்ள அன்பிற்கு எல்லையே இல்லை. ஏன்? ஏனென்றால் 2000 வருடங்களுக்கு முன்பு இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட போதே உங்கள் பாவங்களுக்கான விலை செலுத்தப்பட்டது என்று அறிவார். நீங்கள் தேவனிடத்தில் வந்து அவருடைய மன்னிப்பை பெற்றுகொண்டால், அவர் உங்களை நேசித்திடுவார், உங்களை மன்னித்து உங்களை தழுவிக்கொள்ளுவார்.

அப்போஸ்தலனாகிய பவுல் உறுதியாக கூறுகிறார், "நாம் பாவிகளாக இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." ரோமர் 5:8

ரோமர் 8:1ல், "கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டவர்களாய் இருப்பவர்களுக்கு ஆக்கினை தீர்ப்பு இல்லை."

இன்னொறிடத்திலும் பவுல் கூறுகிறார், "தீத்து 3:5 அவர், தேவனை பற்றி சொல்கிறார், நம்மை இரட்சித்தார், அது நமது நீதியான கிரியைகளினால் அல்ல அவருடைய இரக்கத்தால் இரட்சித்திருக்கிறார்.

இயேசுவின் கதையில் முரட்டாட்டமுள்ள மகன் போன பாதையே பார்த்து உட்காரும் பழக்கம் தகப்பனுக்கு இருந்தது என்கிறார், மகனுடைய வருகைக்காக காத்திருக்கிறான். தன் மகனை திரும்பவும் சேர்த்துக்கொள்ள சித்தமுள்ளவனாக இருக்கிறான், அவன் எப்போது வாருவான் என்பது ஒரு பொருட்டல்ல. அதே மாதிரிதான், உங்கள் பரலோக பிதாவும் அவரைவிட்டு நீங்கள் பாவத்தில் ஈடுபடும்போது உங்கள் வருகைக்காக பொறுமையாக காத்துகொண்டிருக்கிறார். உடைக்கப்படாத ஒரு உறவை உங்களோடு ஏற்ப்படுத்தி கொள்ள அவர் விரும்புகிறார். அவர் உங்கள் மீது அன்புகூரும்படியாக நீங்கள் அவரிடம் திரும்பிவர விரும்புகிறார். கிறிஸ்துவின் மூலமாக அவர் ஏற்ப்படுத்தின சாத்தியமான உறவை நீங்கள் பிரயோஜனப்படுத்திட விரும்புகிறார்.

இந்த கதையில் என்னை மிகவும் ஆச்சரியப்பட வைத்த காரியம் என்னெவென்றால் பரலோக பிதா நம்மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்த ஆவலாய் காத்துகொண்டிருக்கிறார் என்று சொன்ன விஷயம் தான். அவர் என்ன சொல்கிறார் என்று பாருங்கள், "அவன் (முரட்டாட்டமுள்ள பாவம் நிறைந்த மகனை குறிக்கிறது) தூரத்தில் வரும்போதே அவனுடைய தகப்பன் அவனை கண்டு மனதுருகி ஓடி அவன் கழுத்தை கட்டிக்கொண்டு அவனை முத்தம் செய்தான்." லூக்கா 15:20

இன்றைக்கு நீங்க தேவன் பக்கமாக திரும்பினால் அவர் ஓடி வந்து உங்களை கட்டி அணைத்திடுவார் என்று உங்களுக்கு புரிகிறதா. பரிசேயர்கள் இயேசு அண்டசராசரத்தின் தேவனை ஒரு பாவிக்காக ஓடிவந்து அவனை தமது கரங்களில் அனைத்து கொள்வதாக தவறாக போதிக்கிறார் என்று நினைத்தார்கள். அவர்களுடைய கண்ணோட்டத்தின் படி தேவன் பாவிகளை கண்டித்து சிட்சிக்கிறவராக இருந்தார். ஆனால் இயேசுவை பொறுத்தவரை, அவர்கள் எண்ணம் தவறானது. நீங்கள் பாவம் செய்த பிறகு, நீங்கள் நினைப்பதற்கு மேலாக உங்களோடு மறுபடியும் உறவை புதுப்பித்து கொள்ள தேவன் அதிக ஆவலாக இருக்கிறார். நீங்க அவரிடம் திரும்பி வரும் வரை அவரால் காத்திருக்க முடியாது. நீங்க சீக்கிரம் திரும்பி வரும்படி விரும்புகிறார் அதனால் உங்களை சுத்திகரித்து உங்களை மீட்டுக்கொள்ள முடியும் என்கிறார்.

அவர் உங்கள் ஒவ்வொரு பாவத்தையும் முழுவதுமாய் மன்னிக்கிறார் உங்கள் பிரச்சனைகளையும் சூழ்நிலைகளையும் எதிர்கொள்ள உங்களுக்கு பெலன் தனது உங்களை போதித்து நடத்திடுவார்.

தேவனை பற்றிய ஆச்சரியத்துடன் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், "அவர், தம்முடைய சொந்தக்குமாரன் என்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி? ரோமர் 8:32

நீங்கள் ஒருவேளை கேட்கலாம், "இளைய குமாரனுடைய பாவம் என்ன ஆனது? தகப்பன் அதற்கு என்ன செய்தார்? அதை பற்றி எப்போது அவனிடம் பேசினார்? அவன் வீணாக்கிய பணத்தின் நிலை என்ன? குடும்பத்திற்கு அவன் இளைத்த அவமானத்திற்கு என்ன பதில்? விசுவாசத்தோடு தேவன் பக்கமாக திரும்பும் போது, உங்களை பாவங்களை ஒப்புக்கொண்டு, அவரிடத்தில் உதவியை கேட்கும்போது, வேதம் சொல்கிறது தேவன் உங்களை திரும்பவும் சேர்த்துக்கொள்கிறார். நீங்கள் என்ன செய்தீர்கள் எவ்வளவு காலமாக அப்படி இருந்தீர்கள் என்பது அவரை தடை பண்ணாது. அவர் உங்களை உடனே மன்னித்திடுவார்.

எப்படி தேவன் நம்மை இப்படி நேசிக்க முடியும்? அவர் எப்படி நீதியும், பரிசுத்தமும் உண்மையும் உள்ளவராக இருந்தும் நம்மை நேசித்து ஏற்றுகொள்ள முடியும், நாம அதிகப்படியான பாவங்களை செய்திருக்கிறோமே? வேதம் கூறுகிற எளிமையான உண்மை இதுதான் நற்செய்தி கூறுகிறது நம்முடைய பாவங்களுக்கான விலை செளுத்தப்பட்டிருப்பதால் பிதா நம்மிடத்தில் இப்படி நடந்துகொள்கிறார். இயேசு சிலுவையில் மரித்தபோது அவர் தனது ஆக்கினையை தமது கோபத்தை நம்மை விட்டு எடுத்துபோட்டார் என்று கூறுகிறார்.

வேதம் சொல்கிறது, "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படியாக பாவம் அறியாத அவரை (இயேசுவை ) தேவன் நமக்காக பாவமாக்கினார். 2 கொரிந்தியர் 5:21

அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார், "தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." இந்த வசனத்தை பாருங்கள். ""உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்." யோவான் 3:16-17

தேவன் நம்மை இவ்வளவாய் நேசிக்கிறார் என்று புரிந்துகொள்வது நமக்கு கடினம். இயேசுவின் காலத்தில் இதை கேட்டுகொண்டிருந்தவர்களுக்கு தேவனை பற்றிய அவர்கள் கண்ணோட்டத்தி எண்ணத்தை மாற்றிகொள்வது கடினமாக இருந்தது. அப்படி செய்தவர்கள், வாழ்க்கை முற்றிலுமாய் மாறினது.

உங்கள் நிலை என்ன? நம்முடைய பரலோக பிதாவாகிய தேவனை பற்றி இயேசு கூறியவைகளை நீங்கள் ஏற்றுகொள்கிறீர்களா? இயேசுவை பொறுத்தவரை உங்களை அளவில்லாத நேசமும் பொறுமையும் உள்ள மன்னிக்கும் தகப்பன் உங்களுக்கு இருக்கிறார். அவரை அதிகமாக ஒதுக்கி தள்ள முடியாது. நீங்கள் திரும்பி வந்து அவரோடு ஐக்கியப்படும்படியாக அவர் மிகுந்த ஆவலோடு காத்துகொண்டிருக்கிறார். கிறிஸ்து சிலுவையில் மரித்த போது உங்கள் பாவங்களுக்கான விலை செலுத்தப்பட்டு விட்டது.

ஏனென்றால் இயேசு நமக்கு பதிலாக மரித்திருக்கிறார், தேவனுடைய நோக்கம் எல்லாம் நீங்க அவரோசு அன்பின் உறவிற்குள் வரவேண்டும் என்பதே. தேவன் யார் என்ற வேதாக கண்ணோட்டத்தை நீங்கள் புரிந்துகொண்டு ஏற்றுகொள்ள காலதாமதமாகலாம், அவருடைய அன்பின் மனப்பான்மை அவர் எப்படி உங்கள் பாவங்களை விளக்கினார் போன்றவற்றை புரிந்துகொள்ள நேரமெடுக்கும். அது கடினமானதாக தோன்றினாலும், அது உண்மையாக இருப்பதால் அதை பற்றி யோசித்து பாருங்கள்.

தேவன் சங்கீதம் 103:10-14 ல் சொல்வதை பாருங்கள், "அவர் நம்முடைய பாவங்களுக்கு தக்கதாக நமக்கு செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்கு தக்கதாக நமக்கு சரிகட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ அவருக்கு பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விளக்கினார். தகப்பன் தன பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல கர்த்தர் தமக்கு

பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார். நாம் மண்ணென்று நினைவுகூர்ந்தார்."

தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் அவர் உங்களை நேசிக்கிறார் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்கள் என்று உங்கள் பரலோக பிதா அறிந்துகொள்ளும்விதத்தில் இப்போது ஒரு எளிய ஜெபத்தை செய்ய விரும்புகிறீர்களா; உங்களுக்கு பாவங்களுக்கான விலையை கிறிஸ்து செலுத்தினார் என்று விசுவாசிக்கிறீர்கள், இப்போதே நீங்க தேவனிடத்திற்கு தொரும்ப விரும்புகிறீர்கள் என்று சொல்லுங்கள். நீங்கள் தைரியமாக உங்கள் பாவங்களை அவர் முன்பு ஒப்புகொல்லுங்கள். உங்களுக்கு அவர் வேண்டும் என்று சொல்லுங்கள், நீங்கள் அவரை நம்புட ஆயத்தமாக இருப்பதை அவரிடம் சொல்லுங்கள். கிறிஸ்து உங்களுக்காக செய்த கிரியையினால் அவருடைய அன்பு மற்றும் மன்னிப்பாகிய இவை பெற்றுக்கொள்ள ஆயத்தமாக இருப்பதை சொல்லுங்கள்.

அதை இப்போதே தேவனிடம் கூற விரும்புவீர்களா, உங்கள் வாழ்வில் எல்லாவிதமான அவமானமும் நிந்தையும் பாவங்களும் இருக்கலாம். என்னோடு சேர்ந்து இந்த ஜெபத்தை செய்யும்படி அழைக்கிறேன். ஜெபிக்கலாம், "பரலோக பிதாவே, நீர் என்னை நேசிக்கிறீர் என்பதை ஒப்புகொள்ள பல சமயங்களில் என்னை கடினமாக இருக்கிறது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் சாட்சியை நான் நம்புவதால், இப்போதே உம்மை என்னை மன்னிக்கும் பரலோக தகப்பனாக ஏற்றுகொள்கிறேன், அளவற்ற அன்பினால் என்னை நேசிக்கும் தகப்பன், எல்லையற்ற பொறுமை நிறைந்த தகப்பன், என்னோடு ஐக்கியப்பட ஆவலாய் காத்திற்கும் தகப்பன், என் மீது நோக்கமாயிருந்து கிறிஸ்துவுக்குள் என்னுடைய ஸ்தானத்தை உறுதிசெய்திடும் தகப்பன், என்னுடைய கடந்த காலமல்ல, என்னுடைய பாவங்களில் இருந்து மனந்திரும்பி உம்முடைய வழிநடத்துதலையும் உதவியையும் கேட்கும்போது என்னில் களிகூருகிற தகப்பன் நீர். வெளிப்படுத்தும் தேவனே, என்னுடைய சிந்தனையில் இருக்கும் மற்ற பிழைகளையும் எனக்கு வெளிப்படுத்தும் நான் சத்தியத்தின் அடிப்படையில் என்னுடைய வாழ்க்கையை வாழ்ந்திட எனக்கு உதவி செய்திடும். என்னுடைய எல்லா பாவங்களையும் மன்னித்ததற்கு நன்றி உம்முடைய இரக்கத்தையும் தயவையும் எனக்கு காண்பித்ததற்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்."

சரி, இன்னும் பல கேள்விகள் உங்களுக்கு இருக்கும் என்று நினைக்கிறேன் அசுத்த வாரம் வேதம் போதிப்பவைகளை பற்றி அதிகமாக பார்க்க இருக்கிறோம். நம்முடைய தலைப்பு இதுதான்: "வெட்கம்: உண்மையான வெட்கத்திற்கும் பொய்யான வெட்கத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன? இப்போது நம்முடைய வாழ்வை பாதிக்கும் நமது கடந்த கால தோல்விகளை எப்படி கையாள வேண்டும் என்று தேவன் கூறுகிறார்? நம்முடைய வாழ்வில் உள்ள வெட்கங்களை களைந்து விடுதலையும் சந்தோஷமுமான வாழ்க்கை வாழ தேவன் எவ்வாறு உதவுகிறார்?" நிச்சயம் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.